## 27: லோஹபாதஸா புனித சடங்கு

அதன் பின் அனைவரையும் அழைத்த மன்னன் அவர்களுக்கு தன்னுடைய முன்னோர்கள் செய்த சேவைகளைப் பாராட்டி நடந்த நிகழ்சியில் மாபெரும் மகானான தேரா முன்னர் கூறியதை நினைவூட்டினார். தேரா அவருடைய முன்னோரிடம் கூறி இருந்தார் ‘ உன்னுடைய வழித் தோன்றல் தத்தகாமினி நூற்றி எண்பது கியூபிக் அடி உயர தங்க மாலை அணிவிக்கப்பட்ட மாபெரும் ஸ்தாபாவையும் ஒன்பது மாடிகள் கொண்ட உபோசதா என்ற தங்கும் இடத்தையும் லோகபாசதா *(Lohapasada)* என்ற இடத்தில் நிர்மாணிப்பார்’

அங்கிருந்த இடத்தில் புதைத்து வைக்கப்பட்டு இருந்த தங்கத் தட்டினை தேடி எடுத்து அதில் எழுதப்பட்டு இருந்த வாசகங்களை உரத்தக் குரலில் அனைவரும் கேட்கும் வண்ணம் படிக்குமாறு கூறினார். அதில் எழுதப்பட்டு இருந்தது ‘ நூற்றி அறுபத்தி ஆறு ஆண்டுகள் கழிந்தப் பின் காகவானாவின் *(Kakavanna)* புதல்வாரன தத்தகாமனி அறிவாளிகள் கூறும்படி இங்கும் அங்குமாக பலவற்றையும் நிர்மாணிப்பார்’ அதைக் கேட்ட மன்னர் தனது இரு கைகளையும் தட்டி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மறுநாள் காலை எழுந்தவர் மஹாமேக பூங்காவிற்குச் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த விழாவில் ‘ இங்கு உங்களுக்கு கடவுட்கள் வாழும் இடம் போன்ற் ஒரு பாசறை கட்டிக் கொடுக்கின்றேன். ஆகவே எவரையாவது கடவுட்கள் வாழும் இடத்திற்கு அனுப்பி ஒரு வரைபடம் தயாரித்துத் தாருங்கள்’ என்று கேட்க, அதைக் கேட்ட பிட்குக்கள் தம்முடன் இருந்த எட்டு துறவிகளை அந்த காரியத்தை நடத்திக் கொண்டு வருமாறு அனுப்பினர்.

கௌத்தம புத்தருக்கு முன் இருந்த புத்தர்களில் கடைசி புத்தரான காசப்பா என்பவருடைய காலத்தில் அசோகா என்ற பெயர் கொண்ட பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் தன்னுடைய

சகோதர புத்தமார்களுக்கு தினமும் எட்டு வேளை உணவு படைத்தார். தன்னிடம் இருந்த வேலைக்காரப் பெண் பிரானி *(Birani)* என்பவளிடம் அதை தொடர்ந்து செய்யுமாறுக் கூறி இருந்தார். அவள் தன் வாழ்நாள் முழுவதும் அதை நிறைவுடன் செய்து வந்து மரணம் அடைந்து மீண்டும் அடுத்தப் பிறவி எடுத்த பொழுது ஆகாயத்தில் மிதந்து கொண்டு இருந்த தேவதைகளுடைய மாளிகையில் பணி புரியும் பெண்ணாகச் சேர்ந்து தினமும் ஆயிரம் தேவதைகளுக்கு உணவு போட்டாள்.

பன்னிரண்டு யோஜனை நீளமும் நாற்பத்தி எட்டு யோஜனை அகலமுமாக இருந்த அந்த மாளிகை ஒன்பது அடுக்குக்கள், ஆயிரம் ஜன்னல்கள், ஆயிரம் அறைகள் கொண்டதாக இருந்தது. அதில் நான்கு பக்கமும் கிளிஞ்சல் மாலைகள், தொங்க விடப்பட்டு சிறிய மணிகள் கட்டப்பட்டு இருந்தன. அந்த மாளிகையின் நடுவில் அனைத்துப் பக்கத்தில் இருந்தும் தெரியும் வண்ணம் அம்பலாத்திக பாசறை *(Ambalatthika-pásáda)* அமைந்து இருந்தது. அவள் உதவியுடன் அதன் வரை படத்தை ஒரு வழுவழுப்பான துணியில் வரைந்து எடுத்துக் கொண்டு வந்த பிட்குக்கள் அதை மன்னனிடம் கொடுக்க அது போலவே லோகபாசதாவை மன்னன் கட்டினார்.

அந்த பாசறையை கட்டத் துவங்கியதும் தாரபாள மனம் படைத்த அந்த மன்னன் நாலு வாசலிலும் எட்டு லட்ச தங்க நாணயங்களை ஒவ்வொரு வாசலிலும் வைத்து, அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் எவரும் உண்ணாமல், உடுக்காமல் இருக்கக் கூடாது என்பதற்காக ஆயிரம் ஆடைகள், கல்கண்டு மூட்டைகள், சக்கரைப் பொடி, எண்ணை மற்றும் தேன் போன்ற பொருட்களை தாராளமாக வைக்கச் சொல்லி இருந்தார்.

ஓவ் ஒருபுறமும் நூறு கியூபிட் நீளமும் அதே அளவு அகலமும் கொண்ட பாசறை கட்டச் சொன்னார். அது ஒன்பது அடுக்குகளைக் கொண்டு பலவிதமான வண்ணக் கற்கள், நவரத்தினங்கள், தாமரைத் தோட்டம் போன்றவற்றை அடக்கி இருந்தது.

அது போல வண்ணமய மிக்க நவரத்தினங்கள் பதித்த ஆயிரம் அறைகள் அங்கு அமைக்கப்பட்டன. வேசவனாவில் *(Vessavana)* பெண்களுக்கென இருந்த தேரைப் போல அங்கும் நவரத்தின மையத்தில் ஒரு தேர் அமைக்கப்பட்டது. அதன் துாண்களில் புலி, சிங்கம் மற்றும் பல தேவதைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டு இருந்தன.

அந்த மையத்தில் நவரத்தின கற்கள் பதிக்கப்பட்ட தந்தத்திலான சிறிய மலை போன்ற அமரும் ஆசனம் இருந்தது. ஜாதகா கதைகளில் படித்தது போன்ற பிரமிப்பு தரும் விதத்தில் சுரிய ஒளிபோல தங்க நிறத்தில் மின்னிய, சந்திரனைப் போல வெள்ளி நிறத்தில் மின்னிய, நட்சத்திரங்களைப் போல முத்து முத்தாய் மின்னிய கற்கள் பதிக்கப்பட்டு இருந்தன.

அந்த ஆசனத்தில் பளபளக்கும் மிக விலை உயர்ந்து துணிகளில் ஆன திண்டும் வைக்கப்பட்டு, தந்தத்திலான விசிறி மற்றும் ஒளி வீசும் வெள்ளி போன்றவை பல சிற்பங்களாக் பதிக்கப்பட்டு இருந்தது. ஏழு கற்களினால் ஆன எட்டு உருவங்கள், நடு நடுவே முத்துக்கள், ஓசை தரும் சிறிய மணிகள் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்ட குடை வாசல் போன்றவை அந்த மாளிகையின் மதிப்பை அளவிட முடியாதபடி வைத்து இருந்தன.

ஓவ்ஒருவருடைய தகுதிக்கும் ஏற்ப அமைக்கப்பட்டு இருந்த விலை உயர்ந்த படுக்கை விரிப்புக்கள், மெத்தை, நாற்காலிகள் என அமைக்கப்பட்டு குடுவைகளும் கைப் பிடிகளும் தங்கத்தினால் செய்யப்பட்டு இருந்தன. தாமிர மாளிகை என அழைக்கப்படும் அளவில் பாசறையின் மேற் கூறை தாமிரத்திலான தகடுகளினால் மூடப்பட்டு இருந்தது.

லோஹபாசதா தயார் ஆனதும் மன்னன் பிட்குக்களை அழைத்து மாரிகவட்டி விகாரா என்ற பெயரில் அதைத் திறந்து கும்பாபிஷேக உற்சவம் போன்ற அளவில் திறப்பு விழாவை

நடத்தி வைத்தார். போதனைகளில் முதல் கட்டத்தை வெற்றிகரமாகப் பயின்றவர்கள் முதல் அடுக்கிலும், அடுத்தடுத்த அடுக்குக்களில் அடுத்த கட்டத்தை எய்தியவர்களும் தங்க வைக்கப்பட்டனர். நான்காம் அடுக்கிலும் அதற்கு மேல் அடுக்கிலும் துறவிகள் *(அரஹன்த்)* தங்கினர்.

ஒரு வார காலத்திற்கு விழா எடுத்து பல விதமான பரிசுகளை தாராளமாக வழங்கி முப்பது கோடி செலவான பாசறையை பிட்குக்களுக்கு வழங்கி மன்னன் மனம் மகிழ்ந்தார்.

பொருட்களை தன்னிடமே குவித்து வைத்துக் கொள்வது பலனற்றது என்பதை உணர்ந்த அறிவாளிகள் தாராளமாக கொடைகள் தந்து மனதை ஆசையினால் கட்டுப்படுத்திக் கொள்ளாமல் இருந்து மன மகிழ்ச்சி பெறுகின்றனர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஏழாம் பாகமான ‘ லோஹபாதஸா புனித சடங்கு’ என்ற பகுதி முடிவுற்றது.